இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் *1863-1864/2020*

(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண்கள் 24819-24820/2019-லிருந்து எழுகிறது)

கனரா வங்கி ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

பி. செல்லாத்தாள் மற்றும் பலர்
முதலானோர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர். ஷா:

அனுமதி வழங்கப்பட்டது.

2. முதலேற்பு வழக்கு எண் 1269/2010-இல் அசல் பிரதிவாதி எண் 5-ஆகவும், முதலேற்பு வழக்கு எண் 233/2011-இல் அசல் பிரதிவாதி எண் 6 ஆகவும் இருந்து, இங்குள்ள மேல்முறையீட்டாளரான கனரா வங்கியால் உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் கட்டளை 7, விதி 11-இன் கீழ் அதிகாரங்களைச் செயலுறுத்தி, உரிய வழக்குரைகளை நிராகரிக்க முன்கொணரப்பட்ட விண்ணப்பங்களைத் தள்ளுபடி செய்து, அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை உறுதிசெய்தும், உரிமையியல் சீராய்வு மனு (பி.டி.) எண் 2586/2013 மற்றும் உரிமையியல் சீராய்வு மனு (பி.டி.) எண் 2587/2013-இல் பிறப்பிக்கப்பட்ட 9.11.2017-ஆம் தேதியிடப்பட்ட கேள்விக்குள்ளான பொதுவான உத்தரவு மற்றும் தீர்ப்புரையின் மூலம் மெட்ராஸ் உயர் நீதிமன்றம், இங்குள்ள மேல்முறையீட்டாளரான கனரா வங்கியால் முன்கொணரப்பட்ட மேற்சொன்ன சீராய்வு விண்ணப்பங்களைத்

தள்ளுபடி செய்ததில் மனக்குறையுற்றும், திருப்தியடையாமலும் தற்பொழுதுள்ள மேல்முறையீடுகள் முன்கொணரப்பட்டுள்ளன.

3. தற்பொழுதுள்ள மேல்முறையீடுகளுக்கு வழிகோலிய சங்கதிகள் இரத்தினச் சுருக்கமாக பின்வருமாறு:

மேல்முறையீட்டாளரான வங்கியானது, 1995-ஆம் ஆண்டில் திரு. இரவிச்சந்திரன் மற்றும் ஜீ. சுரேஷ் பாபு என்பவர்கள் கூட்டாளிகளாக இருந்த ஒரு கூட்டாண்மை நிறுவனமான தி/ள்.கோயம்புத்தூர் உேறச்சரீஸீக்கு தவணைக் கடனாக ரூ.49,50,000/-ஐ ஒப்பளித்து வழங்கியது. மேற்சொன்ன கடனானது, மேற்சொன்ன நிறுவனத்திற்குச் சொந்தமான அசையாச் சொத்துகளையும், சங்கனூர் கிராமம், புல எண்கள் 472 மற்றும் 488-இல் அமைந்துள்ள பொறுப்புறுதியாளரான திரு. எம்.சி. காளிகுட்டி என்பவரின் நிலத்தையும் அடைமானம் வைத்து பெறப்பட்டதாகும். சங்கனூர் கிராமத்தில் உள்ள புல எண்கள் 472 மற்றும் 488 கொண்ட பொறுப்புறுதியாளரான திரு. எம்.சி. காளிகுட்டி என்பவரின் நிலம்தான் பிரச்சினைக்குரிய வழக்குப்பொருளாகும். மேற்படி திரு. எம்.சி. காளிகுட்டி பொறுப்புறுதியாளராக இருந்தார் என்பது இக்கட்டத்தில் குறிப்பிடத்தக்கதாகும். மேற்சொன்ன திரு. எம்.சி. காளிகுட்டி (இதன்பின்னர் 'பொறுப்புறுதியாளர்' எனக் குறிப்பிடப்படுவார்), 28.9.1995-ஆம் தேதியிடப்பட்ட பொறுப்புறுதி ஆவணத்தில் கையொப்பமிட்டு, கேள்விக்குள்ளான பிரச்சினைக்குரிய நிலங்களின் உரிமைமூல ஆவணங்களை அடைமானத்திற்கு கொடுத்தார்.

3.1. மேல்முறையீட்டாளரான வங்கிக்கு கொடுக்கவேண்டிய கடன் தொகையை அசல்-கடனாளர் திருப்பிச்செலுத்தத் தவறியதால், மேல்முறையீட்டாளரான வங்கி,

முதன்மை கடனாளர், அதன் கூட்டாளிகள், மேலும் பொறுப்புறுதியாளர் ஆகியோருக்கு எதிராக 1997-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சென்னை, கடன் வசூல் தீர்ப்பாயம் முன்பு மு.வி. எண் 489/2001-ஐ தாக்கல் செய்தது. சென்னை கடன் வசூல் தீர்ப்பாயமானது, 31.10.2001 அன்று மு.வி. எண். 489/2001-இல் பொறுப்புறுதியாளருக்கெதிராக எதிர்தரப்பு இல்லாமலேயே மேல்நடத்த ஓர் ஆணை பிறப்பித்தது. மு.வி. எண். 489/2001, கோயம்புத்தூர் கடன் வசூல் தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டு, மா.வி. எண். 822/2002-ஆக மறு எண்ணிடப்பட்டது. மேல்முறையீட்டாளர்-வங்கியால் தாக்கல் செய்யப்பட்ட மா.வி. எண். 822/2002 (முன்னதாக மு.வி. எண் 489/2001), மேல்முறையீட்டாளரான வங்கிக்கு ஆதரவாகவும், முதன்மை கடனாளரோடு பொறுப்புறுதியாளருக்கு எதிராகவும் ரூ.57,35,770/-ஐ ஆண்டொன்றுக்கு 18% வட்டியுடன் கடன் வசூல் தீர்ப்பாயத்தால் தீர்ப்பாணையிடப்படுவதற்கு கொண்டுவரப்பட்டது. ரூ.57,35,770/-க்கு ஆண்டொன்றுக்கு 18% வட்டித்தொகையிட்டு 16.9.2003-ஆம் தேதியிடப்பட்ட மீளப்பெறுகை சான்றிதழ் மேல்முறையீட்டாளரான வங்கிக்கு ஆதரவாக வழங்கப்பட்டது.

3.2. கோயம்புத்தூர் கடன் வசூல் தீர்ப்பாய மீளப்பெறுகை அலுவலர், மா.வி. எண். 822/2002-இல் தீர்ப்பாணையிட்டவாறு, தொகை ரூ.1,55,75,443/-ஐ செலுத்துவற்கு முதன்மை கடனாளர், அதன் கூட்டாளிகள் மற்றும் பொறுப்புறுதியாளர் ஆகியோரை பணித்து, மீ.ம. எண் 141/2003-இல் 11.11.2003-ஆம் தேதியிடப்பட்ட கேட்பறிவிப்பினை அனுப்பினார். பொறுப்புறுதியாளர், தன்னுடைய பொறுப்புறுதியையும், பத்திர ஒப்படைப்பு அடைமானத்தையும் மறுத்து, முதல் தகவல் அறிக்கை ஒன்றைப் பதிவு செய்து, வழக்கை விசாரிக்க குற்றப்பிரிவு-குற்றப்புலனாய்வுத் துறையைப் பணிக்கக்கோரியும் மெட்ராஸ் உயர் நீதிமன்றம் முன்பு நீதிப்பேராணை மனு ஒன்றைப் தாக்கல் செய்தார்.

மெட்ராஸ் உயர் நீதிமன்ற பணித்தலின்பேரில் 2.11.2005 அன்று மு.த.அ. எண் 152/2010 பதிவு செய்யப்படலானது. கோயம்புத்தூர், கு.பி.-கு.பு.து., முதன்மை கடனாளரின் கூட்டாளிகளுக்கு எதிராகவும், மேல்முறையீட்டாளரான வங்கியின் விவசாய விரிவு அலுவலரான கே.வி. ரோஷன் பாபுவுக்கு எதிராகவும் இ.த.ச., பிரிவுகள் 120-ஆ உடன் பிரிவுகள் 465, 466, 467, 468, 471, 420 மற்றும் 419-இன் கீழான குற்றங்களுக்காக கு.வி.மு.ச., பிரிவு 173(2)-இன் கீழ் இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்தது. அதன்பின்னர், 28.6.2011-ஆம் தேதியிடப்பட்ட ஆணை மற்றும் தீர்ப்புரை வாயிலாக, வங்கி அலுவலரான ரோஷன் பாபு மீதான குற்றவியல் நடவடிக்கைகள் உயர் நீதிமன்றத்தால் விலக்கப்பட்டதாக தெரிகிறது.

3.3. 2007-ஆம் ஆண்டில், மேல்முறையீட்டாளரான வங்கிக்கு ஆதரவான மீளப்பெறுகை சான்றிதழைத் தொடர்ந்து, வங்கி, கூட்டாண்மை நிறுவனத்தின் உடைமைகளை ஏலமிட்டு, விற்பனை செய்து ரூ.38 இலட்சத்தை வசூலித்தது. அதன்பின்னர், கோயம்புத்தூர் கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட 27.8.2003-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவு தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலத்திற்குப் பிறகு கோயம்புத்தூர் கடன் வசூல் தீர்ப்பாயம் முன்பான 27.8.2003-ஆம் தேதியிடப்பட்ட எதிரவரில்லாத் தீர்ப்பாணையை நீக்கறவு செய்வதற்காக 2008-ஆம் ஆண்டில் வ.வி. எண் 1821/2008-ஐ பொறுப்புறுதியாளர் தாக்கல் செய்தார். கோயம்புத்தூர் கடன் வசூல் தீர்ப்பாயம் 12.6.2009-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் வாயிலாக 31.10.2001-ஆம் தேதியிடப்பட்ட எதிரவரில்லா ஆணையை நீக்கறவு செய்வதற்கு மனு தாக்கல் செய்ததிலான 2392 நாட்கள் காலதாமதத்தை மன்னிப்பதற்காக பொறுப்புறுதியாளரால் தாக்கல் செய்யப்பட்ட மேற்சொன்ன வழக்கிடை விண்ணப்பத்தை தள்ளுபடி செய்து,

27.8.2003-ஆம் தேதியிடப்பட்ட எதிரவரில்லாத் தீர்ப்பாணையை எதிர்த்துரைப்பதில் 1337 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க மறுத்துவிட்டது.

3.4. அதன்பின்னர், அடைமான தேதியிலிருந்து பதினைந்து ஆண்டு காலத்திற்கு பின்பும், மேலும் கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட 27.8.2003-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்பாணைத் தேதியிலிருந்து ஏழு ஆண்டுகள் கழித்து, இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளர்கள், மு.வ. எண் 822/2002-இல் கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட 27.8.2003-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவு இல்லாநிலையது அதிகாரத்திற்கு மேற்பட்டது, முற்றிலும் செல்லாதது என்றும், வழக்குச் சொத்தின்பேரில் கட்டுப்படுத்தாது என்றும் அறிவித்து, மேலும் மீளப்பெறுகை அலுவலர், பற்றுகை, விற்பனை மூலமாகவோ அல்லது வேறுவகையிலோ வழக்குச்சொத்தின் மீது ஏதேனும் நடவடிக்கை எடுப்பதன் மூலம் தங்களுடைய அமைதியான சுவாதீனம் மற்றும் அனுபோகத்தில் தலையிடுவதிலிருந்து தடுக்கின்ற பின்விளைவான நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான விளம்புகைக்காக பொறுப்புறுதியாளர், முதன்மை கடனாளர் மற்றும் கூட்டாளிகள் ஆகியோருக்கு எதிராக கோயம்புத்தூர் மேதகு இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் மு.வ. எண் 1269/2010 மற்றும் மு.வ. எண் 233/2011 என்பனவற்றைத் தாக்கல் செய்திருந்தனர். மேற்சொன்ன இரு உரிமையியல் வழக்குகளில், மேல்முறையீட்டாளரான வங்கி மு.வ. எண் 1269/2010-இல் 5-ஆம் பிரதிவாதியாகவும் மற்றும் மு.வ. எண் 233/2011-இல் 6-ஆம் பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்டு, உரிமை வழக்குகளின் அழைப்பாணைகள்/அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டன. மேல்முறையீட்டாளரான வங்கி, உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11(ஈ)-இன் கீழ்

அதிகாரங்களைச் செயலுறுத்தி, உரிய வழக்குரைகளை நிராகரிக்க, மு.வ. எண் *1269/2010*-இல் வ.வி. எண் *431/2011*-ஐயும், மு.வ. எண் *233/2011*-இல் வ.வி. எண் *122/2012*-ஐயும் தாக்கல் செய்தது. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் நிலுவைக் கடன்கள் வசூலிப்புச் சட்டம் *1993* (சுருக்கமாக வ.நி.நி.நி.க.வ. சட்டம்) பிரிவுகள் *18* மற்றும் *20(1)*-இன் கீழுள்ள குறிப்பிட்ட அதிகாரவரம்புத் தடையைக் கருத்திற்கொண்டு, இந்த உரிமை வழக்குகள் நிலைக்கத்தக்கவையல்ல என்பதும், உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரவரம்பு இல்லை என்பதும் மேல்முறையீட்டாளரான வங்கியின் சார்பான வழக்காகும். வ.நி.நி.நி.க.வ. சட்டத்தின் பிரிவு *20(1)*-இன்படி கடன் வசூல் தீர்ப்பாய ஆணைக்கு எதிராக கடன் வசூல் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் மேல்முறையிடப்பட்டுள்ளது. ஆகையால், கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை வழக்குகளை ஏற்றுக்கொள்ள உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரவரம்பு இல்லை என்பது மேல்முறையீட்டாளரான வங்கியின் சார்பான வாதமாகும்.

3.5. அசல் வாதிகள், அசல் உரிமையாளரிடமிருந்து வழக்குச் சொத்தை வாங்கியுள்ளதாகவும், அவர்கள் வழக்குச் சொத்தின் சுவாதீனத்திலும், அனுபோகத்திலும் இருந்துவந்ததாகவும் மற்றவற்றுக்கிடையில் பணிந்துரைத்து, மேற்சொன்ன விண்ணப்பங்களை எதிர்த்தனர். விற்பனையாளர் வங்கியிடம் பத்திர ஒப்படைப்பு அடைமானம் ஏதும் வைக்கவில்லை என்பதும், வங்கியின் அலுவலர்கள் முதன்மை கடனாளரின் ஆதரவாளர்களுடன் கூட்டுச்சதி செய்து அசல் உரிமையாளரான அவர்களுடைய விற்பனையாளர் அடைமானம் வைத்திருப்பதுபோன்று, பத்திர ஒப்படைப்பு அடைமானத்தை பொய்யாகப் புனைந்துள்ளனர் என்பதும் அசல் வாதிகளின் தரப்பு வாதமாகும். வழக்குச் சொத்தின் அசல் உரிமையாளரான

திரு. எம்.சி. காளிகுட்டி-பொறுப்பாளரால் கொடுக்கப்பட்ட முறையீட்டின்பேரில் முதல் தகவல் அறிக்கை ஒன்று பதிவு செய்யப்பட்டு, 18.8.2007-ஆம் தேதியிடப்பட்ட குற்ற அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டதாகவும் அது நிலுவையிலுள்ளதாகவும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. வங்கி மற்றும் முதன்மை கடனாளரின் ஆதரவாளர்களும் மோசடி செய்து, கடன் வசூல் தீர்ப்பாயத்தில் தீர்ப்பாணை பெற்றதாக சாட்டுரைக்கப்பட்டது. வங்கியாலும், மற்றவர்களாலும் புரியப்பட்ட மோசடி, உரிமையியல் மன்றத்தினால் மட்டுமே மெய்ப்பிக்கப்பட இயலுமென்றும், கடன் வசூல் தீர்ப்பாயத்தால் அதனை தீர்மானிக்க இயலாதென்றும் பணிந்துரைக்கப்பட்டது. மேலும், வாதிகள், மூன்றாம் தரப்பினர்களாவர் என்றும், ஆகையால் அவர்கள், கடன் வசூல் தீர்ப்பாயம் மற்றும் கடன் வசூல் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தை அணுக இயலாது என்றும் சமர்ப்பிக்கப்பட்டது. ஆகவே, மேற்சொன்ன விண்ணப்பங்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுரைக்கப்பட்டது.

3.6. கற்றறிந்த விசாரணை நீதிமன்றம், உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11(ஈ)-இன் கீழ் அதிகாரத்தைச் செயலுறுத்துகையில், மேற்சொன்ன விண்ணப்பங்களைத் தள்ளுபடி செய்து, உரிய வழக்குரைகளை நிராகரிப்பதற்கு மறுப்புத் தெரிவித்தது.

3.7. உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11(ஈ)-இன் கீழ் மேற்சொன்ன விண்ணப்பங்களைத் தள்ளுபடி செய்து, உரிய வழக்குரைகளை நிராகரிக்க மறுப்புத் தெரிவித்து கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் திருப்தியடையாமலும், மனக்குறையுற்றும் மேல்முறையீட்டாளரான வங்கி உயர் நீதிமன்றம் முன்பு இருவேறு சீராய்வு விண்ணப்பங்களையும் முன்கொணர்ந்தது. கேள்விக்குள்ளான பொதுத் தீர்ப்புரை மற்றும் ஆணையின்படி, இது மோசடியான

அல்லது ஆள்மாறாட்டமான பிரச்சினையா? அல்லது அசல் வாதிகளின் விற்பனையாளரான பொறுப்புறுதியாளரால் வங்கியிடம் வைக்கப்பட்ட அடைமானம் சட்டப்படியானதா? இல்லையா? என்பது உரிமையியல் வழக்குகளிலும், குற்றவியல் வழக்குகளிலும் தீர்மானிக்கப்படவேண்டிய விடயமாகும் எனக் கருத்தறிவித்து, உயர் நீதிமன்றம் மேற்சொன்ன சீராய்வு விண்ணப்பங்களைத் தள்ளுபடி செய்து, உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழ் அதிகாரங்களைச் செயலுறுத்தி, உரிய வழக்குரைகளை நிராகரிப்பதற்கான விண்ணப்பங்களை நிராகரித்து, கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை உறுதிசெய்துள்ளது.

3.8. மு.வ. எண் 1269/2010-இல் அசல் பிரதிவாதி எண் 5-ஆன மற்றும் மு.வ. எண் 233/2011-இல் அசல் பிரதிவாதி எண் 6-ஆன மேல்முறையீட்டாளரான வங்கியும் உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழ் அதிகாரங்களைச் செயலுறுத்தி, உரிய வழக்குரைகளை நிராகரிப்பதற்கு மறுப்பு தெரிவித்து, உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட கேள்விக்குள்ளான பொதுத் தீர்ப்புரை மற்றும் ஆணையில் திருப்தியடையாமலும், மனக்குறையுற்றும் தற்பொழுதுள்ள மேல்முறையீடுகள் முன்கொணரப்பட்டுள்ளன.

4. வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, உயர் நீதிமன்றம், உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11(ஈ)-இன் கீழ் அதிகாரங்களைச் செயலுறுத்தும்வகையில், உரிய வழக்குரைகளை நிராகரித்ததிலும், மேல்முறையீட்டாளரான வங்கியால் முன்கொணரப்பட்ட விண்ணப்பங்களை நிராகரித்து கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை உறுதிசெய்ததிலும் உரிய வழக்குரைகளை நிராகரிக்க மறுப்பு தெரிவித்ததிலும் குறிப்பிடத்தக்க அளவில் பிழைபுரிந்துவிட்டதென்று மேல்முறையீட்டாளரான வங்கியின்

சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. இராஜேஷ் குமார் முனைப்புடன் பணிந்துரைத்துள்ளார். உயர் நீதிமன்றமும், கற்றறிந்த விசாரணை நீதிமன்றமும் வ.நி.நி.நி.க.வ. சட்டத்தின் உரிய வகைமுறைகளைக் குறிப்பாக மேற்சொன்ன சட்டத்தின் பிரிவுகள் *18*, *19* மற்றும் *20*-ஐ முறையாக மதிப்பிடவில்லை மற்றும்/அல்லது பரிசீலிக்கவில்லை என்று கற்றறிந்த வழக்குரைஞரால் முனைப்புடன் பணிந்துரைக்கப்பட்டது.

4.1. மேலும், அசல் வாதிகள் முக்கியமாக மா.வி. எண் *822/2002*-இல் பிறப்பிக்கப்பட்ட *27.8.2003*-ஆம் தேதியிடப்பட்ட கோயம்புத்தூர் கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்துரைத்திருக்கின்றனர் என்றும் மேல்முறையீட்டாளரான வங்கியின் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞரால் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. சாராம்சத்தின்படி வ.நி.நி.நி.க.வ. சட்டத்தின் கீழ், கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக கடன் வசூல் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் முன்பு மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு *20*-இன் கீழ் மேல்முறையீட்டிற்கான பரிகாரம் கிடைக்கத்தக்கதென்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆகையால், வ.நி.நி.நி.க.வ. சட்டம் ஒரு தனிவகைச் சட்டமாக இருத்தலால், மேற்சொன்ன சட்டத்தின் கீழ் வகைசெய்யப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்துரைக்கும் இந்த உரிமையியல் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், ஆதலால் இது, உ.வி.மு.ச., கட்டளை *7*, விதி *11(ஈ)*-க்குள் நேரடியாக வருகின்றது என்றும், அதனால் கற்றறிந்த விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் உ.வி.மு.ச.-இன் கட்டளை *7*, விதி *11(ஈ)*-இன் கீழ் அதிகாரங்களைச் செயலுறுத்தி, உரிய வழக்குரைகளை நிராகரித்திருக்கவேண்டும்

என்றும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன பணிந்துரைக்கு ஆதரவாக, மேல்முறையீட்டாளரான வங்கியின் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர், பஞ்சாப் தேசிய வங்கி -எதிர்- ஒ.சி. கிருஷ்ணன் மற்றும் பலர், *(2001) 6* எஸ்.சி.சி. *569* என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவின்மீது வலுவாகச் சார்வுற்றது. மேற்சொன்ன தீர்முடிவிலுங்கூட இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டவாறு, இந்திய அரசமைப்பின் வகுமுறைக்கூறுகள் *226* மற்றும் *227*-இன் கீழும் இந்த மனுக்கள் நிலைக்கத்தக்கவையல்ல என்று தீர்மானிக்கப்பட்டுள்ளன.

4.2. மேல்முறையீட்டாளரான வங்கியின் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் தி/ள். கேம்பிரிட்ஜ் சொல்யூஷன்ஸ் லிமிடெட், பெங்களூர் -எதிர்- குளோபல் சா.ப்ட்வேர் லிமிடெட், சென்னை, *2016-5*-லா வீக்லி *45* என்ற வழக்கில் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயத்தின் தீர்முடிவின்மீதும் வலுவாகச் சார்வுற்றார். மேற்சொன்ன வழக்கிலும், மீளப்பெறுகை அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்துரைக்குங்கால், வாதி, மோசடியை சாட்டுரைத்து ஓர் உரிமை வழக்கைத் தாக்கல் செய்தார், மேலும் மோசடி என்ற சாட்டுரை இருந்தபோதிலும், மீளப்பெறுகை அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்துரைக்கும் இந்த உரிமை வழக்கு நிலைக்கத்தகாதது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பணிந்துரைக்கப்படுகிறது. மேற்சொன்ன தீர்முடிவில், மோசடி என்னும் சாட்டுரை உண்மையற்றதென உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம் கண்டறிந்துள்ளதாக பணிந்துரைக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன தீர்முடிவுக்கெதிரான சிறப்பு அனுமதி மனு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதென பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

4.3. தற்போதைய வழக்கிலும், மோசடி என்ற சாட்டுரை, திரு. எம்.சி. காளிகுட்டி-பொறுப்புறுதியாளரால் நிறைவேற்றப்பட்ட பொறுப்புறுதி

ஆவணத்தை பொறுத்ததல்ல என்றும், கூட்டாண்மை ஆவணத்தை பொறுத்தது என்றும் மேல்முறையீட்டாளரான வங்கியின் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞரால் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆகையால், அசல் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்குகள் அற்பமானவை என்றும், நீதிமுறைக் கட்டளை தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், அந்த அடிப்படையில், உ.வி.மு.ச.-இன் கட்டளை 7, விதி 11(ஈ)-இன் கீழ் அதிகாரங்களைச் செயலுறுத்தி, வழக்குரைகள் நிராகரிக்கத்தக்கவையாகும் என்றும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. அவருடைய மேற்சொன்ன பணிந்துரைக்கு ஆதரவாக, மேல்முறையீட்டாளரான வங்கியின் சார்பாக ஆஜரான வழக்குரைஞர், டி. அறிவானந்தம் -எதிர்- டி.வி. சத்யபால் *(1977) 4* எஸ்.சி.சி. *467*; ஏ.பி.சி. லேமினர்ட் பிரைவேட் லிமிடெட் -எதிர்- ஏ.பி. ஏஜென்சீஸ் *(1989) 2* எஸ்.சி.சி. *163*; சோபன் சுக்தியோ சப்ளே -எதிர்- அஸிஸ்டெண்ட் சேரிட்டி கமிஷனர் *(2004) 3* எஸ்.சி.சி. *137* மற்றும் மதனூரி திரு. இராம சந்திர மூர்த்தி -எதிர்- சையத் ஜலால் *(2017) 13* எஸ்.சி.சி. *174* ஆகிய வழக்குகளில் இந்த நீதிமன்றத்தின் தீர்முடிவுகளின்மீது வலுவாகச் சார்ந்துநின்றது.

4.4. மேற்சொன்ன பணிந்துரைகளை வைத்தும், மேற்சொன்ன தீர்முடிவுகளின்மீது சார்ந்துநின்றும் தற்பொழுதுள்ள மேல்முறையீடுகளை அனுமதிக்கக்கோரி வேண்டுரைக்கப்பட்டுள்ளது.

5. தற்பொழுதுள்ள மேல்முறையீடுகள், அசல் வாதிகளின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ராபின் ஆர். டேவிட் அவர்களால் தீவிரமாக எதிர்க்கப்பட்டுள்ளது. வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, மிகக் குறிப்பாக, உரிமையியல் நீதிமன்றத்தால் மட்டுமே தீர்மானிக்கப்படக்கூடிய உரிய

வழக்குகளில் மோசடி பற்றி குறிப்பிட்ட சாட்டுரைகள் இருக்கிறபோது, கற்றறிந்த விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11(ஈ)-இன் கீழ் அதிகாரங்களைச் செயலுறுத்தி, வழக்குரைகளை நிராகரிப்பதற்கு மறுப்பு தெரிவித்தது சரியே என்று முனைப்புடன் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

5.1. மேலும், அவ்வகையில், அவர்கள், அவர்களுடைய விற்பனையாளரான திரு. எம்.சி. காளிகுட்டியால் அடைமானம் வைக்கப்பட்டதாக சொல்லப்படும் வழக்குச் சொத்துகளை உண்மையாக விலைக்கு வாங்கியவர்கள் என்று அசல் வாதிகளின் சார்பாக முன்னிலையான கற்றிறந்த வழக்குரைஞரால் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன திரு. காளிகுட்டி என்பவரால் தொடரப்பட்ட குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில், மோசடிக்கான குறிப்பிட்ட சாட்டுரைகள் இருந்தன என்றும், உள்ளபடியே, குற்ற அறிக்கைகள் மேற்சொன்ன திரு. எம்.சி. காளிகுட்டியால் தொடரப்பட்ட குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர், உள்ளபடியே குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில், விசாரணை நீதிமன்றம், கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகளான ஜி. சுரேஷ் பாபு மற்றும் இரவிச்சந்திரன் ஆகியோர் இ.த.ச., பிரிவுகள் 120ஆ உடன் பிரிவுகள் 465, 466, 468, 471, 419 மற்றும் 420 ஆகியவற்றின் கீழான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டனர் என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றமுறு சதித்திட்டத்தில் ஈடுபட்டு, சாட்சிகளின் கையொப்பங்களையும், பெருவிரல் பதிவுகளையும் பொய்யாகப் புனைந்து, திரு. எம்.சி. காளிகுட்டியின் பாகப்பிரிவு ஆவணத்தை மோசடியாகப் புனைந்து, வங்கியிலிருந்து கடன் பெற்றனர் என்று கற்றறிந்த குற்றவியல் நடுவர் திட்டவட்டமாகக் கருத்தறிவித்து தீர்மானித்துள்ளதாக பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

கற்றறிந்த விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11(ஈ)-இன்கீழ் உரிய வழக்குரைகளை நிராகரிப்பதற்கு சரியாகவே மறுப்பு தெரிவித்துள்ளன என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

5.2. மேற்படி பணிந்துரைகளை வைத்து தற்பொழுதுள்ள மேல்முறையீடுகளைத் தள்ளுபடி செய்ய வேண்டுரைக்கப்பட்டுள்ளது.

6. பதிலுரையில், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், மேற்சொன்ன குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் வங்கி ஒரு தரப்பினர் அல்ல, ஆகவே, குற்றவியல் நடுவர் அவர்களின் கருத்துரைகள்/காண்முடிவுகள் எதுவும் வங்கியைக் கட்டுப்படுத்தாது என்று மேல்முறையீட்டாளரான வங்கியின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்துள்ளார்.

6.1. குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளும் கூட்டாண்மை ஆவணத்துடன் தொடர்புடையதே அன்றி, திரு. எம்.சி. காளிகுட்டி-பொறுப்புறுதியாளரால் நிறைவேற்றப்பட்ட பொறுப்புறுதி ஆவணத்துடன் தொடர்பானதல்ல என்றும் மேல்முறையீட்டாளரான வங்கியின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரால் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. திரு. எம்.சி. காளிகுட்டி-பொறுப்புறுதியாளராக நிறைவேற்றப்பட்ட பொறுப்புறுதி ஆவணமும் கற்றறிந்த நடுவர் முன்பாக தாக்கல் செய்யப்படவில்லை என்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, வாதிகள் மேற்சொன்ன குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின்மீது சார்வுற இயலாது மற்றும்/அல்லது வழக்குரைகளில் பயன்படுத்தப்பட்ட 'மோசடி' என்ற வார்த்தையின்கீழ் புகலிடம் தேடிக்கொள்ள இயலாது என்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, வழக்குரைகளில் உள்ள மோசடி என்ற சாட்டுரைகள் கற்பனையானவை, மேலும் உரிமை வழக்குகள் அலைக்கழிப்பதற்கானவை, மேலும், அவை தீயநோக்குடன்

தாக்கல் செய்யப்பட்டுள்ளன, ஆகவே, உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11(ஈ)-இன் கீழான அதிகாரங்களைச் செயலுறுத்தும்வகையில் இதுவொரு தகுதியான வழக்காகும் என்று வாதிடப்பட்டுள்ளது.

7. நாங்கள் அந்தந்த தரப்பினர்களின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களை விரிவாகக் கேட்டறிந்தோம்.

7.1. தொடக்கத்தில், முதன்மை கடனாளர், பொறுப்புறுதியாளர் மற்றும் மீளப்பெறுகை அலுவலரால் வழங்கப்பட்ட மீளப்பெறுகை சான்றிதழ் ஆகியவற்றுக்கெதிராக ஏற்கெனவே கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஒன்று உள்ளது என்பது குறிப்படத்தக்கதாகும். மேல்முறையீட்டாளரான வங்கி முதன்மை கடனாளரான கூட்டாண்மை நிறுவனம் மற்றும் அதன் கூட்டாளிகள் சார்பாக தவணைக் கடனை ஒப்பளித்தது. முதன்மை கடனாளரான கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள் விவசாயக் கடன்களுக்கான ஒப்பந்தக் குறிப்பாணையினை நிறைவேற்றியதன்படி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளையும், நிபந்தனைகளையும் பின்பற்றுவதாக ஒப்புக்கொண்டனர். கடன் வசூல் தீர்ப்பாயத்தின் முன்புள்ள விண்ணப்பத்தில் பிரதிவாதி எண் 4-ஆக உள்ளவரான பொறுப்புறுதியாளர்-திரு. எம்.சி. காளிகுட்டியும் மேற்படி தவணைக் கடன் தொடர்பாக வங்கியில் நிலுவையிலுள்ள கடன் தொகையைச் செலுத்துவதற்கு தன்னைத்தானே கூட்டாகவும், தனியாகவும் பொறுப்பாக்கிக்கொண்டு, ஒரு கூட்டு கடப்பாடுடையவராக மேற்சொன்ன ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளார், மேற்கொண்டு, நிறுவனத்தின் நிலங்களை முதன்மை கடனாளரான கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகளால் அடைமானம் வைக்கப்பட்டும், மேலும், பொறுப்புறுதியாளர்-திரு. எம்.சி. காளிகுட்டி தனக்கு சொந்தமான நிலங்களை அடைமானம் வைத்தும் தவணைக்கடன்

பெறப்பட்டது. கடன் வசூல் தீர்ப்பாயத்தால் இந்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை, வெகுகாலத்திற்கு முன்னதாக *27.8.2003* அன்றே பிறப்பிக்கப்பட்டுவிட்டது, மேலும், மீளப்பெறுகை சான்றிதழும் *16.9.2003* அன்றே வங்கியின் சார்பாக வழங்கப்பட்டுவிட்டது. ஐந்து ஆண்டு காலத்திற்குப் பின்னர் *27.3.2003*-ஆம் தேதியிடப்பட்ட எதிரவரில்லாத் தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய கடன் வசூல் தீர்ப்பாயம் முன்பு மேற்சொன்ன திரு. காளிகுட்டி வழக்கிடை விண்ணப்பத்தை தாக்கல் செய்தார். அது, *12.6.2009* அன்று கடன் வசூல் தீர்ப்பாயத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. எனினும், இதற்கிடையில், மேற்சொன்ன காளிகுட்டி, கூட்டாண்மை ஆவணம் தொடர்பான மோசடியை சாட்டுரைத்து முதன்மை கடனாளரான கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகளுக்கு எதிராக குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தார். அதன்பிறகு அடைமானமிட்ட தேதியிலிருந்து பதினைந்து ஆண்டுகள் கழித்தும், கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை தேதியிலிருந்து ஏழு ஆண்டுகள் கழித்தும், அசல் வாதிகள் மோசடியை சாட்டுரைத்து *27.8.2003*-ஆம் தேதியிடப்பட்ட கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்துரைக்கும் அடிப்படையிலும் தற்பொழுதுள்ள உரிமை வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர். மேற்படி உரிமை வழக்குகளில் அசல் வாதிகள் வழக்குச் சொத்தை *30.1.1996* மற்றும் *10.3.1997*-ஆம் தேதியிடப்பட்டதன்படியான கிரைய ஆவணங்களின்மூலம் அவர்களின் விற்பனையாளரிடமிருந்து வாங்கியுள்ளனர், அது, தவணை கடன் வாங்கும்போது அடைமானம் வைக்கப்பட்டிருந்தது என்பதும், *30.1.1996* மற்றும் *10.3.1997*-ஆம் தேதியிடப்பட்டதன்படியான விற்பனை ஆவணங்களின் மூலம் அவர்களால் வாங்கப்பட்ட வழக்கு நிலங்கள் முதன்மை கடனாளரான கூட்டாண்மை நிறுவனத்தின்

கூட்டாளிகளால் மோசடியாக அடைமானம் வைக்கப்பட்டதாலும், கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை அவர்களைக் கட்டுப்படுத்தாது என்பதும் அசல் வாதிகள் தரப்பு வழக்காகும். இந்த உரிமை வழக்குகளின் அசல் வாதிகள் பின்வரும் பரிகாரங்களை மற்றவற்றுக்கிடையில் வேண்டுரைத்துள்ளனர்:

"அ) மா.வி. எண் 822/2002-இல் கோயம்புத்தூர் கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட 27.8.2003-ஆம் தேதியிடப்பட்டதாக சொல்லப்படும் உத்தரவு இல்லாநிலையது, அதிகாரத்திற்கு மேற்பட்டது, முற்றிலும் செல்லாதது என்றும், வழக்குச் சொத்தின்பேரில் கட்டுப்படுத்தாது என்றும், மேலும், 6-ஆவது பிரதிவாதி, பற்றுகை அல்லது விற்பனை மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ வழக்குச் சொத்தின்மீது ஏதும் நடவடிக்கை எடுப்பதன்மூலம் வழக்குச் சொத்தில் வாதியின் அமைதியான உடைமை மற்றும் அனுபோகத்தில் தலையிடுவதிலிருந்து தடுக்கின்ற பின்விளைவான நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான விளம்புக்காகவும்;

ஆ) வழக்குச் சொத்தைப் பொறுத்தவரையில் 5-ஆம் பிரதிவாதியானவரான முதல் பிரதிவாதியால் வைக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் சாட்டுரைக்கப்பட்ட அடைமானம் இல்லாநிலையது, முற்றிலுஞ்செல்லாதது என்றும், அதனை கட்டுப்படுத்துவது என்றும், மேலும், 5-ஆம் பிரதிவாதி

விற்பனை மூலமாகவோ அல்லது வேறுவகையிலோ வழக்குச் சொத்தின்மீது ஏதும் நடவடிக்கை எடுப்பதன் மூலம் வழக்குச் சொத்தில் வாதியின் அமைதியான உடைமை மற்றும் அனுபோகத்தில் தலையிடுவதிலிருந்து தடுக்கின்ற பின்விளைவான நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான விளம்புகைக்காகவும்."

இவ்வாறு, அடிப்படையில் வாதிகளாக உள்ள வாங்குநர்கள் கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்துரைக்கின்றனர். உண்மையில் வழக்குச் சொத்து 1995-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அடைமானம் வைக்கப்பட்டுள்ளதும், அசல் வாதிகள் 30.1.1996 மற்றும் 10.3.1997-ஆம் தேதியிட்டதன்படி வழக்குச் சொத்தை வாங்கியிருப்பதாக கூறியிருப்பதும் இக்கட்டத்தில் குறிப்பிடத்தக்கதாகும். கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிரவரில்லாத் தீர்ப்பாணையை அகற்றி, நீக்கறவு செய்வதற்காக 2008-ஆம் ஆண்டில், அறிவார்ந்த கடன் வசூல் தீர்ப்பாயத்தின் முன்பு பொறுப்புறுதியாளரான திரு. காளிகுட்டி வழக்கிடை விண்ணப்பத்தை தாக்கல் செய்தபோதுங்கூட, எந்தவொரு சமயத்திலும் வாதிகளுக்கு வழக்குச் சொத்துகளை தான் ஏற்கெனவே விற்றுவிட்டதை அவர் வெளியிடவில்லை என்பதும் இக்கட்டத்தில் குறிப்பிடத்தக்கதாகும். 30.1.1996 மற்றும் 10.3.1997-ஆம் தேதியிட்டதன்படியான கிரைய ஆவணங்களிலுள்ள கூற்றுப்படி, அசல் உரிமையாளர்களின் பகர அதிகாரப் பத்திரத்தைக் கொண்டிருப்பவரான திரு. காளிகுட்டியால் அக்கிரைய ஆவணங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றாலும், விற்பனை மறுபயனும் ரொக்கமாக செலுத்தப்பட்டுள்ளது என்றாலும், அதுவும் இக்கட்டத்தில் குறிப்பிடத்தக்கதாகும்.

இதில் இங்கு மேற்படி கருத்துரைக்கப்பட்டவாறும், *27.8.2003*-ஆம் தேதியிடப்பட்ட, அறிவார்ந்த கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையால் குறிப்பிடப்பட்டவாறும், *28.9.1995*-ஆம் தேதியிட்ட விவசாயக் கடன்களுக்கான ஒப்பந்தக் குறிப்பாணையில் பொறுப்புறுதியாளரான காளிகுட்டி மட்டுமல்லாது, நிறுவனத்தின் கூட்டாளிகளும் கடனை அடைப்பதற்கு ஒப்புக்கொண்டு, கூட்டாகவும், தனித்தனியாகவும் பொறுப்பேற்றுக்கொண்டு, கூட்டு கடப்பாடுடையவர்களாகி, கையொப்பமிட்டுள்ளனர். மேலும், மேற்சொன்ன காளிகுட்டியுங்கூட அவருக்கு சொந்தமான நிலங்களை அடைமானம் வைத்தார். வழக்குரையிலுள்ள கூற்றுகளைப் பரிசீலிக்கையில், கூட்டாண்மை ஆவணத்தைப் பொறுத்த மோசடிக்கான சாட்டுரைகள் அதுவும் முதன்மை கடனாளரான கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகளால் சொல்லப்பட்டுள்ளன. எனினும், திரு. காளிகுட்டியால் அடைமானம் வைக்கப்பட்ட சொத்துகளைப் பொறுத்தளவில், அடைமானமிட்ட தேதியிலிருந்து *15* ஆண்டுகள் கழித்தும், கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்துரைக்கும் அடிப்படையில், கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைத் தேதியிலிருந்து *7* ஆண்டுகள் கழித்துங்கூட வழக்குரையில் அதுகுறித்து ஒரு குறிப்பும் இல்லை. கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்து உரிமை வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், பிரதிவாதிகளில் ஒருவரான மேல்முறையீட்டாளரான வங்கி, வ.நி.நி.நி.க.வ. சட்டத்தின் வகைமுறைகளை மிகக் குறிப்பாக சட்டத்தின் பிரிவுகள் *18*, *19*, *20*-ஐ பரிசீலித்து, உரிமை வழக்குகள் நிலைக்கத்தக்கவையல்ல என்ற அடிப்படையில் உ.வி.மு.ச., கட்டளை *7*, விதி *11(ஈ)*-இன் கீழ் அதிகாரங்களைச் செயலுறுத்தி, வழக்குரைகளை நிராகரிப்பதற்கு விண்ணப்பங்களைத்

தாக்கல் செய்தார். இவ்விரண்டு விண்ணப்பங்களும் அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது, மேற்கொண்டு அவை உயர் நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டன. ஆகையால் இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்காக முன்வைக்கப்பட்ட சுருக்க வினா யாதெனில், வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்குகள் உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11(ஈ)-இன் கீழ் அதிகாரங்களைச் செயலுறுத்தி நிராகரிப்பதற்குரியவையா? இல்லையா? என்பதை பரிசீலிப்பதற்காகவேயாகும்.

7.2. மேற்சொன்ன பிரச்சினை/வினாவினைப் பரிசீலிக்கையில், உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11(ஈ)-இன் கீழான அதிகாரங்களைச் செயலுறுத்துவதன்பேரில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவுகள் சிலவற்றைக் குறிப்பிட்டு, பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது.

7.3. **(மேற்கண்ட) டி. அறிவானந்தம்** என்ற வழக்கில், அந்த விண்ணப்பத்தைப் பரிசீலிக்கையில், அதே வகைமுறையை அதாவது உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-ஐயும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பாணையையும் பரிசீலிக்கையில் இந்த நீதிமன்றம் பத்தி 5-இல் கருத்துரைத்து கீழ்க்கண்டவாறு தீர்மானித்துள்ளதாவது:

> "5. நீதிமன்றத்தின் கட்டளையை திரும்பத்திரும்ப மிகவும் தவறாகப் பயன்படுத்தியதற்கும், அதனை நாடிச்சென்று வருத்தம் தெரிவிக்காததற்கும் மனுதாரரை கண்டிப்பதில் நாங்கள் ஒருசிறிதும் தயக்கங்கொள்ளவில்லை. உயர் நீதிமன்றத் தீர்ப்புரையில் காணப்படும் விவரமான சங்கதிகளிலிருந்து, பெங்களூர் முதல் உரிமையியல் நீதிமன்றத்தின் முன்பு தற்போது

நிலுவையிலுள்ள உரிமை வழக்கு. வழக்குரைகளைப் பெறுவதில் உள்ள சட்டத்தின் சலுகைகளை மிகவும் தவறாகப் பயன்படுத்தியுள்ளது தெள்ளத்தெளிவாகிறது. வழக்குரையினை விதிமுறைப்படியல்லாது கருத்தார்ந்து படித்தால், இது வழக்காடுவதற்கான ஓர் உரிமையைத் தெளிவாக வெளிப்படுத்தாதவகையில், இது வெளிப்படையாகவே அலைக்கழிக்கக்கூடியதும், தகுதிப்பாடற்றதுமாகும் என்பதை கற்றறிந்த உரிமையியல் நீதிபதி நினைவிற்கொண்டு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள காரணம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை அக்கறையுடன் பார்த்து, உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழ் தன்னுடைய அதிகாரத்தை அவர் செயலுறுத்தவேண்டும். மேலும், தந்திரமான முன்வரைவு, வழக்குமூலம் போன்ற தோற்றத்தை உருவாக்குமெனில், அதனை உ.வி.மு.ச., கட்டளை 10-இன் கீழ் ஆய்ந்து, தரப்பினரை முதல் கேட்பின்போது விசாரித்து, அதனை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடவேண்டும். செயல்திறமுடைய நீதிபதியே பொறுப்பற்ற உரிமை வழக்குகளுக்கு விடையாவார்...."

7.4. **சர்ச் ஆ.ஃப் கிரைஸ்ட் சேரிடபள் டிரஸ்ட் மற்றும் எஜீகேஷனல் சேரிடபள் சொசைட்டி -எதிர்- பொன்னியம்மன் எஜீகேஷனல் டிரஸ்ட்,** *(2012) 8* **எஸ்.சி.சி.** *706* என்ற வழக்கில் இந்நீதிமன்றம் பத்தி 13-இல் கருத்துரைத்து கீழ்க்கண்டவாறு தீர்மானித்துள்ளதாவது:

"13. வழக்குரையின் கூற்றுகளைக் கூர்ந்தாராயுமிடத்து, வழக்கு மூலத்திற்கான மூலாதாரங்களை உறுதிப்படுத்திக்கொள்வது விசாரணை நீதிமன்றத்தின் பொறுப்புமிகு கடமையாகும். வழக்குமூலம் என்பது ஒரு கட்டான சங்கதிகளை. அவர்களுக்கு பொருந்தக்கூடிய சட்டத்துடன் எடுத்துக்கொண்டு, பிரதிவாதிக்கு எதிரான பரிகார உரிமையை வாதிக்கு அளிக்கிறது. ஒரு தீர்ப்பாணையைப் பெற வாதியை மெய்ப்பிக்க இயல்விக்கும் அவசியமான ஒவ்வொரு சங்கதியும் தெளிவான வாசகங்களால் விவரிக்கப்படவேண்டும். "வழக்கு மூலம்" என்ற வார்த்தைகளின் அர்த்தத்தை கண்டறிவது பயனுடையதாகும். ஒரு வழக்கு மூலமானது பிரதிவாதியால் செய்யப்படும் ஏதோவொரு செயலை உள்ளடக்கியிருக்கவேண்டும், ஏனென்றால் அத்தகையதொரு செயல் இல்லாவிடில், வழக்குமூலம் ஏதும் வந்தடைவதற்கு சாத்தியமில்லை."

7.5. (மேற்கண்ட) ஏ.பி.சி. லாமினர்ட் பிரைவேட் லிமிடெட் -எதிர்- ஏ.பி. ஏஜென்சீஸ், சேலம் இந்த நீதிமன்றம் "வழக்குமூலத்தின்" பொருளைப் பின்வருமாறு விளக்கியுள்ளது:

"12. ஒரு வழக்குமூலம் என்பது வாதி, நீதிமன்றத்தின் தீர்ப்புரைக்கான அவருடைய உரிமைக்கு ஆதரவளிக்கும்பொருட்டு எதிர்வாதமிடப்படும் ஒவ்வொரு சங்கதியையும் மெய்ப்பிப்பது அவசியமாகும். இது ஒரு கட்டான

சங்கதிகளை அவர்களுக்கு பொருந்தக்கூடிய சட்டத்துடன் எடுத்துக்கொண்டு, பிரதிவாதிக்கு எதிரான பரிகார உரிமையை வாதிக்கு அளிக்கிறது. அது பிரதிவாதியால் செய்யப்படும் ஏதோவொரு செயலை உள்ளடக்கியிருக்கவேண்டும், ஏனென்றால் அத்தகையதொரு செயல் இல்லாவிடில், வழக்குமூலம் ஏதும் வந்தடைவதற்கு சாத்தியமில்லை. அது வழக்கு தொடுப்பதற்கான உரிமையை உண்மையில் மீறுவதற்குட்பட்டதல்ல. ஆனால், அது அடிப்படையாக உள்ள முக்கிய சங்கதிகள் யாவற்றையும் உள்ளடக்குகிறது. அது அவ்வாறான சங்கதிகளை மெய்ப்பிப்பதற்கு அவசியமான சான்று எதனையும் கொண்டிருக்கவில்லை என்றாலும், வாதி ஒரு தீர்ப்பாணையைப் பெறுவதற்கு அவரை மெய்ப்பிக்க இயல்விக்கும் ஒவ்வொரு சங்கதியும் அவருக்கு அவசியமாகும். மெய்ப்பிக்கப்படாதவை யாவும் பிரதிவாதிக்கு உடனடியான தீர்ப்புக்கு உரிமையளிப்பதோடு, வழக்குமூலத்தின் ஒரு பகுதியாகவும் கட்டாயமிருக்கவேண்டும். அது பிரதிவாதியால் அமைக்கப்படும் எதிர்வாதங்கள் எதுவாயினும், அதனுடன் தொடர்பு கொண்டிருக்காது என்பதோடன்றி, வாதியால் வேண்டுரைக்கப்படும் பரிகாரத்தின் தன்மையின் மீதும் சார்ந்திருக்காது."

7.6. ***(மேற்கண்ட) சோபன் சுக்தியோ சாபிள்*** என்ற வழக்கில் பத்திகள் 11 மற்றும் 12-இல் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு கருத்துரைத்திருப்பதாவது:

"11. ஐ.டி.சி. லிமிடெட் -எதிர்- கடன்கள் வசூல் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் [(1998) 2 எஸ்.சி.சி. 70] என்ற வழக்கில் சட்டத்தின் கட்டளை 7, விதி 11-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை விவாதிக்கையில், தீர்மானிக்கவேண்டிய அடிப்படைக் கேள்வியானது, வழக்குரையில் உண்மையான வழக்குமூலம் விவரிக்கப்பட்டுள்ளதா? அல்லது சட்டத்தின் கட்டளை 7, விதி 11-லிருந்து வெளியே வருவதற்கான நோக்கத்துடன் முற்றிலும் ஏதோவொன்று கற்பனையாக உரைக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

12. வழக்குரையினை விதிமுறைப்படியல்லாது கருத்தார்ந்து படித்தால், இது வழக்கிடுவதற்கான ஓர் உரிமையை தெளிவாக வெளிப்படுத்தாதவகையில், இது வெளிப்படையாகவே அலைக்கழிக்கக்கூடியதும், தகுதிப்பாடற்றதுமாகும் என்பதை அறிவார்ந்த விசாரணை நீதிமன்றம் நினைவிற்கொண்டு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள காரணம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா? என்பதை அக்கறையுடன் பார்த்து, உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழ் அதிகாரத்தைச் செயலுறுத்தவேண்டும். தந்திரமான முன்வரைவு வழக்குமூலம் போன்ற தோற்றத்தை உருவாக்குமெனில், அதனை சட்டத்தின் கட்டளை 10-இன் கீழ் ஆய்ந்து, தரப்பினரை முதல் கேட்பின்போது விசாரித்து,

அதனை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடவேண்டும். (காண்க: (மேற்கண்ட) டி. அறிவானந்தம் வழக்கு)."

7.7. (மேற்கண்ட) மதனூரி திரு. இராம சந்திர மூர்த்தி என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்மானித்து கருத்துரைத்ததாவது:

"7. மேற்சொன்ன வகைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படுமாயின், கட்டளை 7, விதி 11-இன் கீழ் வழக்குரை நிராகரிக்கப்படலாம். உரிமை வழக்கின் எந்தவொரு கட்டத்திலும், உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழான அதிகாரம் நீதிமன்றத்தால் செயலுறுத்தப்படலாம் என்பதைக் கருத்துரைக்கத் தேவையில்லை. இந்த விண்ணப்பத்தை தீர்மானிப்பதற்கு ஆராயப்படவேண்டிய தொடர்புடைய சங்கதிகள் யாதெனில், வழக்குரையின் உறுதிக்கூற்றுகள் மட்டுமேயாகும். வழக்குரையினை முழுமையாக கருத்தார்ந்து படித்தலின்பேரில், இது வழக்கிடுவதற்கான உரிமையைத் தெளிவாக வெளிப்படுத்தாதவகையில், உரிமை வழக்கு வெளிப்படையாகவே அலைக்கழிக்கக்கூடியதும், தகுதிப்பாடற்றதுமாகும் எனக் கண்டறியப்பட்டால், நீதிமன்றம் உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழான அதிகாரத்தைச் செயலுறுத்தவேண்டும். உரிமையியல் நடவடிக்கையினைத் தொடக்கநிலையிலே முடிவுறுத்துவதற்கு, நீதிமன்றத்திற்கு அளிக்கப்படும் அதிகாரம் கடுமையானதாக இருந்தால், வழக்குரையினை நிராகரிக்கும்

அதிகாரத்தைச் செயலுறுத்துவதற்கு உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படவேண்டும். உரிமை வழக்கானது ஏதேனும் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளதா? என்பதை கண்டறிவதற்கு வழக்குரையிலுள்ள உறுதிக்கூற்றுகள் முழுமையாகப் படிக்கப்படவேண்டும். உரிமை வழக்கானது ஏதேனும் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளதா? என்பது எப்பொழுதும் ஒவ்வொரு வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்மீது சார்ந்திருக்கிறதா? என்ற வினாவில் கருத்தூன்றத் தேவையில்லை. வழக்குரையை நிராகரிப்பதற்கான பிரதிவாதியின் வேண்டுரையை பரிசீலிக்கையில், எதிர்வழக்குரையிலுள்ள உறுதிக்கூற்றுகளும், பிரதிவாதியின் வாதுரைகளும் முற்றிலும் சாரமற்றதாகும். வழக்குரையிலுள்ள சாட்டுரைகளை அதன் முகமதிப்பில் முழுமையாக சரியென எடுத்துக்கொண்டாலுங்கூட, உரிமை வழக்கு ஏதேனும் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளது என்று அவை காண்பித்தாலோ அல்லது வழக்குமூலத்தை வெளிப்படுத்தாவிட்டாலோ வழக்குரையை நிராகரிப்பதற்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழான அதிகாரம் செயலுறுத்தப்படலாம். வழக்குரையின் தந்திரமான முன்வரைவு, வழக்குமூலம் போன்ற தோற்றத்தை உருவாக்குமெனில், நீதிமன்றம் அதனை மிக

முன்னதாகவே முளையிலேயே கிள்ளி எறிந்துவிடுமாயின், பொய்ப்புனைவான வழக்கு முந்தைய கட்டத்திலேயே முடிவுக்கு வந்துவிடும்."

7.8. **இராம் சிங் -எதிர்- கிராம பஞ்சாயத்து மேஉறல் கலான்,** *(1986)* 4 **எஸ்.சி.சி.** 364 என்ற வழக்கில், உரிமை வழக்கு ஏதேனும் சட்டத்தால் தடைசெய்யப்படுகிறபோது, எச்சூழ்நிலைகளால் உரிமை வழக்கு காலவரையறைச் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ, அதனைக் குறிப்பிடுவதைத் தவிர்க்கும்பொருட்டு, தந்திரமான முன்வரைவின்படி, அவ்வகைமுறையை வளைத்துக்கொள்ள வாதியை அனுமதிக்க இயலாது என இந்நீதிமன்றம் கருத்துரைத்து, தீர்மானித்துள்ளது.

8. கையிலுள்ள வழக்கின் சங்கதிகளுக்கு உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழ் அதிகாரங்களைச் செயலுறுத்தி, மேற்சொன்ன தீர்முடிவுகளில் இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்ட சட்டத்தையும், வழக்குரையின் உறுதிக்கூற்றுகளையும் பொருத்திப்பார்க்கையில், இரு கீழமை நீதிமன்றங்களும் உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழ் அதிகாரங்களைச் செயலுறுத்தி, வழக்குரைகளை நிராகரிக்காததில் முக்கியமான அளவுக்கு பிழைபுரிந்துள்ளன என்று நாங்கள் கருதுகிறோம். இதில் மேலே கருத்துரைக்கப்பட்டவாறு, கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்துரைப்பதே உரிமை வழக்குகளிலுள்ள முக்கியமான வேண்டுரையாகும். அறிவார்ந்த கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையும், மீளப்பெறுகை அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையும் வ.நி.நி.நி.க.வ. சட்டத்தின் பிரிவு 20-இன் கீழ் மேல்முறையிடக்கூடியதாகும். ***(மேற்கண்ட)* ஒ.சி. கிருஷ்ணன் மற்றும் பலர்** என்ற

வழக்கில் கடன் வசூல் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு முன்பாக மாற்று பரிகாரத்திற்காக முன்கொணரப்படும் இந்த மேல்முறையீட்டைக் கருத்திற்கொண்டு, அப்பரிகாரத்தை முழுவதும் பயன்படுத்திக்கொள்ளாமல், கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்துரைக்கும் வகுமுறைக்கூறு 227-இன் கீழான இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருத்துரைத்து, தீர்மானித்துள்ளது. **(மேற்கண்ட) ஒ.சி. கிருஷ்ணன் மற்றும் பலர்** என்ற வழக்கில் கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை, இந்திய அரசமைப்பின் வகுமுறைக்கூறு 227-இன் கீழான ஒரு மனுவில் எதிர்க்கப்பட்டது. உயர் நீதிமன்றம் மனுவினை அனுமதித்தது. பஞ்சாப் நேஷனல் வங்கி என்ற வங்கியின் மேல்முறையீட்டை அனுமதிக்கையில், வ.நி.நி.நி.க.வ. சட்டத்தின் கீழான பரிகாரங்களை முழுவதுமாக பயன்படுத்திக்கொள்ளாவிட்டால், வகுமுறைக்கூறு 227-இன் கீழ் உயர் நீதிமன்றம் அதன் அதிகாரவரம்பைச் செயலுறுத்தியிருக்கக்கூடாது என்று இந்நீதிமன்றம் கருத்துரைத்துள்ளது. அவ்வாறு தீர்மானிக்கையில், பத்தி 6-இல் இந்நீதிமன்றம் கருத்துரைத்து, கீழ்க்கண்டவாறு தீர்மானித்துள்ளதாவது:

> "6. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் நிலுவைக் கடன்களை வசூலிப்பதற்காக தனிப்பட்ட நடைமுறையை வகைசெய்யும் நோக்குடன் இந்த சட்டமியற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டின் படிநிலை உள்ளது. அதாவது, பிரிவு 20-இன் கீழ் ஓர் மேல்முறையீடு தாக்கல் செய்தலாகும், மேலும் இந்த விரைவுமுறை நடைமுறையானது,

அரசமைப்பின் வகுமுறைக்கூறுகள் 226 மற்றும் 227-இன் கீழான நடவடிக்கைகளின் துணையை நாடுவதாலோ, வெளிப்படையாக தடைசெய்யப்பட்டுள்ள ஓர் உரிமை வழக்கினைத் தாக்கல் செய்வதாலோ தடம்மாறிச் செல்ல அனுமதிக்கப்பட இயலாது. இச்சட்டத்தின் கீழான ஒரு வகுமுறை அரசமைப்பின் வகுமுறைக்கூறுகள் 226 மற்றும் 227-இன் கீழ் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை வெளிப்படையாக நீக்க இயலாது என்றாலுங்கூட, மாற்றுப்பரிகாரம் கிடைக்கத்தக்கதாயிருந்தாலும், நீதிமன்றம், மேற்படி அரசமைப்பு வகைமுறைகளின் கீழ் தனது அதிகாரவரம்பைச் செயலுறுத்துவதிலிருந்து தடைசெய்யப்படுகிறது என நீதிச்சட்டக் கோட்பாடு கோருகிறது. உயர் நீதிமன்றம், அரசமைப்பின் வகுமுறைக்கூறு 227-இன் கீழ் மனுவை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய வழக்கு இதுவாகும். மேலும் சட்டத்தின்படி வகைசெய்யப்பட்டுள்ள செயலமைவுத் திட்டத்தின் துணையை நாடிச்செல்ல எதிர்மேல்முறையீட்டாளரை பணித்திருக்கவேண்டும்."

9. ***(மேற்கண்ட) ஒ.சி. கிருஷ்ணன் மற்றும் பலர்*** என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் தீர்முடிவினைச் சார்ந்துநின்றும், பின்பற்றியும், அதன்பின்னர் ***(மேற்கண்ட) தி/ள். கேம்பிரிட்ஜ் சொல்யூஷன்ஸ் லிமிடெட்*** என்ற வழக்கில் மெட்ராஸ் உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம், உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11(ஈ)-இன் கீழான அதிகாரங்களைச் செயலுறுத்தி, கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்க்கும் வழக்குரையை நிராகரித்துள்ளது. மேற்சொன்ன வழக்கிலும்,

வழக்குரையில் மோசடிக்கான சாட்டுரைகள் இருந்தன என்பதையும், வழக்குரையின் உறுதிக்கூற்றுகளைப் பரிசீலித்தும், மோசடிக்கான சாட்டுரைகள் உண்மையற்றவை எனக் கண்டறியப்பட்டது என்பதையும் குறிப்பிடத்தக்கதாகும். மேற்சொன்ன தீர்முடிவில் நீதியராயம் மோசடிக்கான குறிப்பிட்ட நிகழ்வுகளுக்கும், செயல்களுக்கும் சாட்சியமிருப்பதாக வழக்குரையின் வாதுரைத்திருக்கவேண்டும் என நீதியர் ஈராயம் கருத்தறிவித்துள்ளது. வெறும் கூற்றுகள் போதுமானவையல்ல என்றும் கருத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், மோசடி உள்ளதாக வாதுரைப்பது மட்டும் போதுமானதல்ல, மோசடி புரியப்பட்டுள்ளது என்பதைக் காண்பிக்க சான்றாதாரம் இருக்கவேண்டுமென்றும் கருத்துரைக்கப்பட்டுள்ளது.

10. உரிமை வழக்குகளின் வாதங்களையும், உறுதிக்கூற்றுகளையும் குறிப்பாக மோசடிக்கான சாட்டுரைகளைக் கருத்திற்கொண்டு, மோசடி என்ற சாட்டுரைகள், கூட்டாண்மை ஆவணம் குறித்தேயுள்ளன, மேலும் திரு. காளிகுட்டி-பொறுப்புறுதியாளரால் வைக்கப்பட்ட அடைமானம் குறித்து, அதுவும் பொறுப்புறுதியாளரால் நிறைவேற்றப்பட்ட பொறுப்புறுதி ஆவணம் குறித்து, எந்த சாட்டுரைகளும் இல்லை. நிறுவனத்தின் கூட்டாளிகளைக் குற்றவாளிகளாகத் தீர்மானித்து, கற்றறிந்த நடுவரால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மீது அதிகமாகச் சார்வுறப்பட்டது. எனினும், கற்றறிந்த நடுவரால் பிறப்பிக்கப்பட்ட மேற்சொன்ன தீர்ப்புரையிலும், பொறுப்புறுதி ஆவணம் பற்றியோ மற்றும்/அல்லது பொறுப்புறுதியாளரால் வைக்கப்பட்ட அடைமானம் குறித்தோ குறிப்புகள் ஏதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேற்சொன்ன நடவடிக்கைகளில் வங்கியும் ஒரு தரப்பினர் அல்ல. கற்றறிந்த நடுவரால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவுக்கு எதிராக இன்னுமொரு மேல்முறையீடு நிலுவையிலிருப்பதாக

தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறிருக்கையில், உரிமை வழக்கிலுள்ள வாதுரைகளையும்/உறுதிக்கூற்றுகளையும் மோசடிக்கான சாட்டுரைகளையும் பரிசீலித்து, மோசடிக்கான சாட்டுரைகள் பொய்யானவை என்றும், கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையிலிருந்து வெளியே வருவதற்கான நோக்கத்திற்காகவே என்றும் நாங்கள் கருதுகிறோம். ஆகவே வழக்குகள் அலைக்கழிப்பதற்கானவை. கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையிலிருந்து வெளியே வருவதற்கான தீயநோக்குடன் தாக்கல் செய்யப்பட்டவையாகும் என நாங்கள் கருதுகின்றோம். இதில் மேற்படி கருத்துரைக்கப்பட்டவாறு, உண்மையான உரிமையாளரின் பகர அதிகாரம் கொண்டிருப்பவரான திரு. காளிகுட்டியால் நிறைவேற்றப்பட்ட 30.1.1996 மற்றும் 10.3.1997-ஆம் தேதியிடப்பட்டதான கிரைய ஆவணங்களின் அடிப்படையில் உரிமையும், உரிமைமூலத்தையும் வாதிகள் கோருகின்றனர். எனினும், வழக்குரையிலுள்ள உறுதிக்கூற்றுகளின்படி, அவர்கள், அவர்களுடைய விற்பனையாளரிடமிருந்து வழக்குச் சொத்தை வாங்கியுள்ளனர் என்பது உண்மையிலேயே தவறாகும். கிரைய ஆவணங்களைச் சாதாரணமாக படித்தாலே, உண்மையான உரிமையாளரின் பகர அதிகாரம் கொண்டிருப்பவரான திரு. காளிகுட்டியால் கிரைய ஆவணங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. இதில் மேற்படி கருத்துரைக்கப்பட்டவாறு 2008-ஆம் ஆண்டிலேயே மேற்படி காளிகுட்டி கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிரவரில்லாத் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நீக்கி, இரத்து செய்ய கடன் வசூல் தீர்ப்பாயம் முன்பு வழக்கிடை விண்ணப்பத்தை தாக்கல் செய்தபோது, அசல் வாதிகளுக்கு ஆதரவாக அவர் ஏற்கெனவே சொத்தை

விற்றுவிட்டார் என்பதை அவர் வெளிப்படுத்தவில்லை. இதில் மேற்படி கருத்துரைக்கப்பட்டவாறு, விற்பனைத் தொகையும் ரொக்கமாக செலுத்தப்பட்டுள்ளதாகவே சொல்லப்பட்டுள்ளது என்பதாகும். 30.1.1996 மற்றும் 10.3.1997-ஆம் தேதியிட்ட கிரைய ஆவணங்கள் நிறைவேற்றுவதற்கு முன்னரே, நிலங்கள், திரு. காளிகுட்டியால், மேல்முறையீட்டாளரான வங்கியில் அடைமானம் வாயிலான கடனீடாக ஏற்கெனவே வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு, வழக்கின் ஒட்டுமொத்த சங்கதிகளையும், சூழ்நிலைகளையும் பரிசீலிக்கையில், அசல் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்குகள் அலைக்கழிப்பவை, அற்பமானவை. மேலும், நீதிமன்றம் சட்டத்தின் கட்டளைகளைத் தவறாக பயன்படுத்துவதற்கேயன்றி, வேறு எதற்காகவும் அவை தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே, மேற்சொன்ன தீர்முடிவுகளில் குறிப்பாக, ***(மேற்கண்ட) டி. அறிவானந்தம்*** என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்ட சட்டத்தைப் பரிசீலிக்கையில், உரிமை வழக்குகள் அலைக்கழிப்பவையாகவும், அற்பமானவையாகவும் உள்ளதால், வழக்குரைகள் உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழான அதிகாரங்களைச் செயலுறுத்தி, நிராகரிக்கப்படவேண்டியவையாகும். ***(மேற்கண்ட) டி. அறிவானந்தம்*** என்ற வழக்கில் நீதியரசர் கிருஷ்ண ஐயர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டு, மீண்டும்மீண்டும் ஒரு சொல்லைக் கூறும் ஒரு பொய்யான தோற்றத்தை உருவாக்கும் வழக்கமுறை, கட்டளை 7, விதி 11(அ)-இன் கீழ் ஓர் விண்ணப்பத்தை விவாதிக்கையில், நீதிமன்றத்தால் நிச்சயமாக சிக்கல் அகற்றப்பட்டு, விளக்கப்படவேண்டும். இந்நீதிமன்றத்தால் கருத்துரைக்கப்பட்டவாறு, அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட

வேண்டியவையாகும். இதில் மேற்படி வேறுவகையில் கருத்துரைக்கப்பட்டவாறும், வ.நி.நி.நி.க.வ. சட்டத்தின் கீழ் வகைசெய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டுக்கான பரிகாரத்தை முழுவதுமாக பயன்படுத்திக்கொள்ளாமல், கடன் வசூல் தீர்ப்பாத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை மறுத்துரைக்கும் அடிப்படை பரிகாரத்துடன் கூடிய உரிமை வழக்குகள், ***(மேற்கண்ட) ஒ.சி. கிருஷ்ணன் மற்றும் பலர்*** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் கருத்தறிவித்து தீர்மானிக்கப்பட்டவாறு தள்ளுபடி செய்வதற்குரியவையாகும்.

11. இக்கட்டத்தில், உரிமை வழக்குகள் அடைமானமிட்ட தேதியிலிருந்து *15* ஆண்டு காலத்திற்கு பின்னரும், மேலும் கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைத் தேதியிலிருந்து *7* ஆண்டுகளுக்கு பின்னரும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். வழக்குரைகளில் அடைமானம் மற்றும் கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை குறித்து *6* மாதங்களுக்கு முன்னர்தான் வாதிகளுக்கு தெரியவந்தது என்று உறுதிபட கூறப்பட்டுள்ளது. எனினும், மேற்சொன்ன உறுதிக்கூற்றுகள் மிகவும் தெளிவற்றவை எனக் கூற இயலும். சொத்தின் அடைமானம் குறித்தும் மற்றும் கடன் வசூல் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பற்றியும் வாதிகளுக்கு எப்பொழுது மற்றும் எவ்வாறு தெரியவந்தது என்று எதுவும் உறுதிபட கூறப்படவில்லை. காலவரையறைச் சட்டத்திலிருந்து வெளியே வருவதற்கான ஒரே நோக்குடனும் மற்றும் வரையறை காலத்திற்குள் உரிமை வழக்குகளைக் கொண்டுவருவதற்கான நோக்குடனும்தான் அவ்வாறான தெளிவற்ற உறுதிக்கூற்றுகள் செய்யப்பட்டுள்ளன. அத்தகைய தெளிவற்ற உறுதிக்கூற்றுகளின்பேரில் வாதிகள்

காலவரையறைச் சட்டத்திலிருந்து வெளியேவர இயலாது. வழக்குரைகளில் காலவரையறையின்பேரில் திட்டவட்டமான வாதுரைகளும், உறுதிக்கூற்றுகளும் இருக்கவேண்டும். ஆகையால், இந்த அடிப்படையிலும் வழக்குரைகள் நிராகரிக்கப்படுவதற்குரியவையாகும். இதில் மேற்படி கருத்துரைக்கப்பட்டவாறு, வழக்குரைகள் அலைக்கழிப்பவை, அற்பமானவை, தகுதியற்றவை, அவை நீதிமன்றம் மற்றும் சட்டத்தின் கட்டளையைத் தவறாகப் பயன்படுத்துவதற்கேயன்றி, வேறு எதற்கானதுமல்ல. ஆதலால், இது உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11(ஈ)-இன் கீழான அதிகாரங்களைச் செயலுறுத்துவதற்கான பொருத்தமான வழக்காகும். இவ்விரண்டு கீழமை நீதிமன்றங்களும் உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11(ஈ)-இன் கீழான அதிகாரங்களைச் செயலுறுத்தி வழக்குரைகளை நிராகரிக்காததில் முக்கியமான அளவுக்கு பிழைபுரிந்துள்ளன. இவ்விரண்டு கீழமை நீதிமன்றங்களும் தங்களிடம் அடைவுற்ற அதிகாரவரம்பினைச் செயலுறுத்தாததில் முக்கியமான அளவுக்கு தவறு செய்துள்ளன.

12. மேற்படியானவற்றைக் கருத்திற்கொண்டும், மேற்கூறப்பட்ட காரணங்களுக்காகவும், இவ்விரண்டு மேல்முறையீடுகளும் வெற்றிபெறுகிறது. உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11(ஈ)-இன் கீழான அதிகாரங்களைச் செயலுறுத்தி, உரிய வழக்குரைகளை நிராகரிப்பதற்கு மேல்முறையீட்டாளரான வங்கியால் முன்கொணரப்பட்ட விண்ணப்பங்களை நிராகரித்து, கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவுகளையும், சீராய்வு விண்ணப்பங்களையும் தள்ளுபடி செய்து, உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இந்த கேள்விக்குள்ளான பொது தீர்ப்புரையும், உத்தரவும் நீக்கப்பட்டு, தள்ளுபடி செய்யப்படுகிறது. அதன்விளைவாக, கோயம்புத்தூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வாதிகளால் தாக்கல்

செய்யப்பட்ட மு.வ. எண் 1269/2010 மற்றும் மு.வ. எண் 233/2011-இல் நிலுவையிலுள்ள வழக்குரைகள் நிராகரிக்கப்படுகின்றன. அதன்படி இந்த மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன. செலவுத்தொகை இல்லை.

மாண்புமிகு நீதியரசர் திரு. உதய் உமேஷ் லலித்
மாண்புமிகு நீதியரசர் இந்திரா பானர்ஜி
மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர். ஷா

புது தில்லி,
28.2.2020.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."